**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண். 234/2022, வா.சா.1.ராஜேந்திரன்,

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.08.2025.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா மாறுதல் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு பட்டா மாறுதல் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 5, 6, 7, 8 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை சங்கதிகளை பொய்யானவை என நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். 5, 6, 7, 8 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். 5, 6, 7, 8 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை சங்கதிகள் சரிதான் என்றும் அதன்விவரங்கள் தெரியாமல் மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு பாகப் பத்திரத்தில் தவறு ஏற்பட்டிருந்தால் நான் திருத்தல் ஆவணமே ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றும் அதனை விடுத்து உறுதிமொழி ஆவணம் ஏற்படுத்தி தாக்கல் செய்த இவ்வழக்கானது நிலைநிற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

2) 5, 6, 7, 8 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வழக்கு உறுதிமொழி ஆவணம் 5, 6, 7, 8 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் மேற்சொன்னவாறு பட்டா மாறுதல் வேண்டுமென்றால் வருவாய்துறையினரையே அணுகியிருக்க வேண்டும் என்றும் அதனைவிடுத்து நீதிமன்றத்தை நாடி உள்ளது முறையற்றது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி